மதுராந்தகம் தாலுகாவைப் பிரிக்கும் திட்டம்.

*வினா எண் 224—திரு. எஸ். டி. உகம்சந்த், திரு. சி. கணேசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) செங்கற்பட்டு, மாவட்டம் மதுராந்தகம் தாலுகாவை இரண்டாக பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் புதிய வட்டம் எப்பொழுது முதல் செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது இந்த ஆண்டு நடைமுறைக்கு வர வழிவகைகள் செய்து தர அரசு முன்வருமா? அதோடு, பொதுவாக, துணை வட்டங்களாக இருக்கக்கூடியவைகளை எல்லாம், முழு வட்டங்களாக்க அரசு எண்ணியுள்ளதா? ஆமென்றால், இதுவரை எத்தனை மாற்றப்பட்டிருக்கின்றன? இனிமேல் எத்தனை மாற்றப்பட இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் ; பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் 33 துணை வட்டங்களை, முழு அந்தஸ்து பெற்ற வருவாய் வட்டங்களாக இந்த அரசு ஆக்கியிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு 166 வட்டங்கள் இருக்கின்றன. மேலும், தேவைக்கேற்றவாறு புதிய வட்டங்களை உருவாக்குவதற்கு அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது.

திரு. கே. ஆர், சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வட்டங்களைப் பிரிப்பதற்கு ஆலோசனை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்திலே குடியாத்தம் தாலூகாவை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதைப்பற்றி அரசு ஆவன செய்ததா என்று அறிய விரும்புகிறேன்.

1982 பிப்ரவரி 17]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதே போல் பல மாவட்டங்களில் இருந்து கோரிக்கைகள் வந்து இருக்கின்றன. அவைகளைப் பார்த்து, பரிசீலித்து, முறைப்படி ஒன்றன்பின் ஒன்றாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாலூகாக்கள் எந்த வரைமுறையின்கீழ் பிரிக்கப்படுகின்றன. அதுபோன்று மதுராந்தகம் பகுதியில் எந்தெந்தப் பகுதிகளைப் பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளது என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தாலூகாக்களிலே இருக்கிற ஜனத்தொகை, அந்தப் பகுதியின் விஸ்தீரணம், அங்கு கிடைக்கும் வருவாய், அதிலே இருக்கிற பின்தங்கிய பகுதி, இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து மக்களுக்கு நன்மை விளைவிக்கும் வகையில் அவைகள் பிரிக்கப்படும்.

புலவர் பட்டம் பெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்கும் திட்டம்.

*வினா எண் 225—திரு பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புலவர் படித்து முடித்த செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு இரண்டு ஊக்க ஊதிய உயர்வுகள் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) புலவர் தகுதிபெற்ற இடைநிலை ஆசிரியர்களுக்கு ஊக்க ஊதியம் வழங்குவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9.20)

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர்களே, வித்வான் படிப்பு முடித்தவர்களுக்கு பி. இடி. ஆசிரியர் தகுதி ஊதியம் வழங்கும் நிலை தற்போது உள்ளது. வித்வான் படித்து